1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே 1984–86 வரைக்கும் கிட்டத்தட்ட 1192 கறவை மாடுகளுக்கு மானியம் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியிலும் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் 489 பேருக்கு அங்கே கறவை மாட்டுக்கு மானியம் வழங்கப்பட்டு இருக்கிறது. அங்கே இவர்கள் 2, 3 ஆண்டுகளாக மானியம் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சினை அங்கே இப்போது இல்லை. தற்போது எல்லா இடங்களிலும் அந்த மானியம் வழங்குவதற்கு உத்திரவு போடப்பட்டு அங்கே சம்பந்தப்பட்ட பால் கூட்டுறவுத் துறை மூலமாக வழங்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அதை மாற்றி அமைப்பதற்கான பிரச்சினை இப்போது இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய அலுவலகத்தில் முறையிட்டபின்பு தான் இந்த மானியம் கிடைக்கிற அளவில் இருக்கிறது. இனிமேல் இந்தத் தடை இல்லாத அளவுக்கு நேரடியாகக் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா? மேலும் இந்த ஆண்டு தாட்கோ மூலமாக அளிக்கும் மானியத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீட்டை அரசு செய்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் தடங்கல் இருந்தால் உடனடியாக அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும். இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அந்த மக்களுடைய நலத்தைக் கருதி 35·22 லட்ச ரூபாய் ஒதுக்கி மானியமாகக் கொடுக்கின்ற அளவுக்கு உத்திரவுவிட்டு இருக்கிறோம்.

3. அவையுரிமை மீறல் பிரச்சினை—'தினகரன்' நாளிதழ் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 22–4–1987 ஆம் தேதி, ''மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்'' மானியக் கோரிக்கை மீது, மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் சுற்றுப் பயணத்தைக் குறித்து சில கருத்துக்களைக் கூறினார்கள். அக் கருத்துக்கள் அவைக் குறிப்பிலிருந்து அவைத் தலைவர் அவர்களால் நீக்கப்பட்டது. ஆனால் அந்த நீக்கப்பட்ட பகுதிகளை 'தினகரன்'-சென்னைப் பதிப்பு

23–4–1987-ல் பிரசுரித்துள்ளது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வேண்டுமென்றே பத்திரிகையில் பிரசுரிப்பது அவை உரிமை மீறிய செயலாகும். இந்த நிகழ்வில் அப்பத்திரிகை வேண்டுமென்றே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதியை தெரிந்தே அவையின் நிகழ்ச்சியை திசை திருப்பும் நோக்குடன் பிரசுரித்துள்ளது. எனவே இப்பிரச்சினையை ஆராய்ந்து அவைக்கு அறிக்கை அளிக்கும்படி பேரவை விதி 226-ன் கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம் இல்லாமல் எப்படி அனுப்ப முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Suo Motu ஆக இருக்கலாம். (குறுக்கீடு) நேற்று நீங்கள் அவையில் இல்லை. அதை நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடு).

Speaker has got suo motu power to refer to the privlieges committee

திரு. அ. ரகுமான்கான்; அப்படி என்றால் எல்லாவற்றையும் காலிசெய்துவிடுவீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தப்பு செய்தால் காலி ஆகும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது Suo Motu எப்படி ஆகும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதை பிரசுரித்தால் அதன் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? தயவு செய்து அமருங்கள். நேற்றைய தினம் திரு. நாஞ்சிலார் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க நான் அதை நீக்குகிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள். நான் தான் நீக்கினேன். நீங்கள் நேற்று இல்லை. (குறுக்கீடு) இப்படி திடீரென்று எழுந்து பேசுவது முறை அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தான் எல்லாவற்றையும் நீக்கிவிடுகிறீர்களே; எதை நீக்குகிறீர்கள் என்று யாருக்கு தெரிகிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இருந்து கவனித்தால் அது தெரியும். எல்லாம் தப்பாகப் பேசினால், நீக்காமல் என்ன செய்வது. நீங்கள் அமருங்கள். இது நேற்றைய தினம் நடைபெற்றது. நேற்றைய தினம் அவைக் குறிப்பிலிருந்து நான் தான் இதை நீக்கினேன். (குறுக்கீடு) என்னை நீங்கள் கேள்வி கேட்க முடியாது.